சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

## ஆணை நாள். 09.07.2026

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 3261/D/2024**

திரு G.சுப்பிரமணியன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டக் கணக்காயர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
ஹட்கோ காலனி, பீளமேடு,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 04.09.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 09.10.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 12.03.2024 |

******

## ஆணை

இன்று 09.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு G.சுப்பிரமணியன் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி வெ.பானுப்பிரியா, கோட்டக்கணக்காயர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004 அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 04.09.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரரின் தந்தையார் திரு P.கோவிந்தன் அவர்களுக்கு கோவை மாவட்டம், சிங்காநல்லூர் SIHS காலனியில் ஒதுக்கப்பட்ட வீட்டு எண்.283 ஒதுக்கீடு பெற்ற வருடமான 08.08.1974 முதல் எந்த ஆண்டு வரை

திரு P.கோவிந்தன் அவர்கள் பெயரில் ஒதுக்கீடு இருந்தது என்ற விவரம் தொடர்பான 5 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, பீளமேடு, கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 09.10.2023 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 12.03.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்கள் அனைத்தும் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் இருந்தும் பொதுத் தகவல் அலுவலர் இதுநாள் வரையில், தனக்கு முழுமையான தகவல்களை வழங்கவில்லை என்றும் இனம் 1 உண்டான விவரங்கள் தனக்கு கொடுக்கப்படவில்லை எனவும், இனம் 2 முதல் 4 வரையிலான தகவல்கள் தங்களது அலுவலகத்தில் கிடைக்கப் பெறாத காரணத்தால் தகவல்கள் தனக்கு வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல எனவும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர் தனக்கு அளித்த தகவலில் 05.08.1974ஆம் ஆண்டு திரு கோவிந்தன் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது என்று தான் கோராத தகவலை வழங்கியுள்ளதாகவும், தனது தந்தை பெயரில் எந்த ஆண்டு வரை வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததது என்ற தகவலை வழங்கவில்லை எனவும், முழுமையற்ற தகவலை வழங்கிய பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய மனுதாரரின் தந்தையார் திரு P.கோவிந்தன் அவர்களுக்கு கோவை மாவட்டம், சிங்காநல்லூர் SIHS காலனியில் ஒதுக்கப்பட்ட வீட்டு எண்.283 ஒதுக்கீடு பெற்ற வருடமான 08.08.1974 முதல் எந்த ஆண்டு வரை திரு P.கோவிந்தன் அவர்கள் பெயரில் ஒதுக்கீடு இருந்தது என்ற விவரம் தொடர்பான தகவல்களை சற்றேறக்குறைய 2 ½ ஆண்டுகள் கழித்து ஏற்கனவே ந.க.எண்.A2/640/2024, 06.01.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திருமதி R.சகிலா வசந்தகுமாரி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,***

கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 07.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது

- மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத ஒரு பொது அதிகார அமைப்பின் கோட்ட கணக்காயர் பொறுப்பில் இருக்கும் உயர் அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் படி மனுதாரரின் மனு பெறப்பட்டு 2 ½ ஆண்டு காலம் ஆகியும் மனுதாரருக்கு இதுநாள் வரையில் முழுமையான தகவல்களை வழங்காமல் இருந்த 04.09.2023 நாளன்று பொதுத் தகவல் அலுவலராக இருந்த தகவல் அலுவலர் / கோட்ட கணக்காயர், கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மேல் கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்திற்கு வழிவகுக்கும் இந்த சட்டத்தினை மதிக்காமல் செயல்பட்ட பொது அதிகார அமைப்பினை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது.
- மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (Violation of the Act) இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும்
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (Unreasonable delay) இவ்வாணையத்தின் விசாரணையில் நிரூபிக்காத காரணத்தால்
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் இனம் 2 முதல் 4 வரையிலான மூலகோப்பு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தை சார்ந்ததாக இருந்து இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தால் தகவல் வழங்க இயலவில்லை எனத் தெரிவித்துள்ள ஏற்புடையதல்ல என ஆணையம் கருதுகிறது. (Providing False and Misleading information / Incomplete Information)
- பொதுத்தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (Harrasment of Unnecessary inconvenience caused) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும்
- மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000 /- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும். மனுதாரர் தொகையினை மேற்படி பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை

*இவ்வாணையத்திற்கு 07.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கில், நிர்வாக பொறியாளர், கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)-இன் கீழ் 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து உரிய விசாரணை மேற்கொண்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை ஒவ்வொரு பக்கத்திலும் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நிர்வாக பொறியாளரின் விசாரணை அறிக்கை நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 07.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் 2. தற்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**
**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண்.SA 3261/D/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டக் கணக்காயர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
ஹட்கோ காலனி, பீளமேடு,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004.

<u>உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:</u>
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
ஹட்கோ காலனி, பீளமேடு,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 004.

<u>**மனுதாரர்**</u>

திரு G.சுப்பிரமணியன்,
த/பெ.(லேட்)P.கோவிந்தன்,
சைட் நெ.9, பிரியா நிவாஷ்,
வ.உ.சி.நகர், SIHS காலனி,
விமான நிலையம் (அஞ்சல்),
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 014.

***Copy to: File***
***VP / PA***